2013 ஏப்ரல் 9]

185—

நியாய விலைக் கடை

***4580—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், தேவனூர் நாடு ஊராட்சி, மேட்டுவிளாரம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், தேவனூர் நாடு ஊராட்சியில், 291 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் பெரும்பரப்பு முழுநேர நியாய விலைக் கடையு மேட்டுவிளாரம் கிராமத்தைச் சேர்ந்த 58 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன. மேட்டுவிளாரத்தில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. என்றாலும்கூட, மலைப் பகுதியில் வாழும் மக்களுக்கும் தங்குதடையின்றி அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, 2012-2013 ஆம் நிதியாண்டில் கூட்டுறவுத் துறை அறிவிப்புகளில் தெரிவித்தவாறு, இக்கடையை நடத்தும் கொல்லிமலை பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு நடமாடும் சிறப்பு வாகனம் வாங்கப்பட்டுள்ளது. அதன்மூலம் இக்கிராமத்தைச் சேர்ந்த 58 குடும்ப அட்டைதாரர்களுக்கு பிரதி மாதம் 4-வது புதன்கிழமைதோறும் நடமாடும் நியாய விலைக் கடைமூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

திருமதி ஆர். சாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில், தேவனூர் நாடு ஊராட்சி, பெரும்பரப்பு நியாய விலைக் கடை 295 கார்டுகள் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தக் கடையின்கீழ் மேட்டுவிளாரம் கிராமத்தில் 58 குடும்ப கார்டுகள் மட்டுமே உள்ளன. எனவே, இந்த மேட்டுவிளாரம் கிராம மக்கள் தேவனூர் நாடு ரேஷன் கடைக்கு பொருட்களை வாங்குவதற்கு செல்ல வேண்டுமென்றால், 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று பொருட்களை தலையில் சுமந்து வரவேண்டிய ஒரு அவல நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. எனவே, பழங்குடியினர் வாழ்கின்ற மலைப் பகுதிகளில் இதுபோன்று அட்டைகள் குறைவாக இருந்தாலும், தூரம் குறைவாக இருந்தாலும், விதியைத் தளர்த்தி அங்கே பகுதி நேரக் கடைகள் கொடுக்கலாம். எனவே, மேட்டுவிளாரம் கிராமத்திற்குப் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் மேட்டுவிளாரம் ஊரில் நியாய விலைக் கடை நடத்துவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

எனவேதான் கடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதில் எந்த மக்களுக்கும் சிரமம் ஏற்படக்கூடாது. அது குக்கிராமங்களாக இருந்தாலும்சரி, மலைக் கிராமங்களாக இருந்தாலும்சரி, அவர்களுக்குத் தங்குதடையின்றி நியாய விலைக் கடைகளில் விநியோகிக்கப்படும் பொருட்கள் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகத்தான்

2013 ஏப்ரல் 9]

10 வாகனங்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இதுபோன்ற வரலாறு இதுவரை இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதன்முதலாக மலைக் கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கும், அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க வேண்டும், அந்தப் பொருட்களை வாங்குவதற்கு எந்த இடையூறும் இல்லாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, அந்த வாகனங்களை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மேற்கண்ட பகுதிக்கும் வாகனங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. விரைவில் வாகனம்மூலம் சென்று, அந்த ஊர் மக்களுக்குப் பொருட்கள் கிடைக்கும் வகையில் நேரடியாகக் கொடுக்க இருக்கிறார்கள். மேலும் அந்த மக்களுக்கு அவர்கள் வாங்கத் தவறிவிட்டால் அல்லது அவர்கள் வெளி ஊருக்குச் சென்றுவிட்டால் சனிக்கிழமைதோறும் அவர்களுக்கு அங்கே வழங்குவதற்கும் மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கொல்லிமலையில் லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் 1985 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டின்படி நியாய விலைக் கடை கட்டப்பட்டுள்ளதால், அதில் சுமார் 3 டன் அளவுக்குதான் பொருட்கள் வைக்கும் இடமாக உள்ளது. தற்போது மக்களின் தேவைக்கேற்ப சுமார் 10 டன் அளவிற்குப் பொருட்கள் வைப்பதற்காக, அங்கு புதிய நவீன வசதி கொண்ட நியாய விலைக் கடை கட்டித் தருவதன்மூலம் பழங்குடியின மக்கள் பெரிதும் பயனடைவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய நவீன வசதி கொண்ட நியாய விலைக் கடையைக் கட்டித்தர முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று நியாய விலைக் கடைகள் கட்டவேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டினால் சிறப்பாக இருக்கும். இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இதுபற்றி எடுத்துரைத்து, மாவட்ட ஊராட்சி முகமை மூலமாக நிதிகள் பெற்று கட்ட முடியுமா என்பதை அதிகாரிகள்மூலம் கலந்துபேசி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் ஞாயிற்றுக்கிழமைகளில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று அறிவிப்புச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினையும், பாராட்டினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை நகரில் இருக்கக்கூடிய, 1,000 கார்டுகளுக்குமேல் இருக்கக்கூடிய கடைகளை ஆய்வு செய்து, குறிப்பாக 6-வது, 7-வது வார்டு பகுதிகளில் இந்தப் பிரச்சினைகள் இருப்பதாகக் கூறுகின்றார்கள். அந்தக் கடைகளிலிருந்து கார்டுகளைப் பிரித்து வேறு கடைகளுக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களாக இருந்தால் 500 குடும்ப அட்டைதாரர்கள் இருக்க வேண்டும், குறைந்தபட்சம் 3-1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். நகரமாக இருந்தால் 2 கிலோ

மீட்டர் தூரம் இருக்க வேண்டும். 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்பது கூட்டுறவுச் சட்டத்தின் விதி. இது இருந்தபோதிலும், அங்கே இருக்கக்கூடிய உள்ளூர்ப் பிரச்சினை, சாதிப் பிரச்சினை மற்றும் ஏதாவது ஒரு பிரச்சினை இருக்குமேயானால், அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட இணைப் பதிவாளர் மற்றும் தாலுகா அலுவலர்களுடன் கலந்து பேசி, அங்கே இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அந்த நியாய விலைக் கடையைப் பிரித்துக் கொடுக்கலாம். பிரித்துக் கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. வாய்ப்பு இல்லாதபட்சத்தில் அதனுடைய முக்கியத்துவம் கருதி அவர்கள் அனுப்பும்பொழுது, நிச்சயமாக அந்தக் கடை பிரித்துக் கொடுக்கப்படும். மாவட்ட உணவுக் கழக தலைமையகத்திற்கு அனுப்பிவைத்தால், கூட்டுறவு, உணவுத் துறையின் மூலமாக நடவடிக்கை எடுத்து, அதிவிரைவிலே அந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

186—

பாசன வாய்க்கால்

*__6081__—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியிலுள்ள முட்டல் ஏரியை ஆழப்படுத்தி, பாசன வாய்க்கால் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*